Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, ஆகஸ்ட் 14, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 31

# பெட்ரோல் விலை குறைப்பு

## நாளை முதல் அமல் ரூ.3 குறைப்பு - நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்



சென்னை, ஆக 14 2021: பெட்ரோல் மீதான வரி குறைப்பு அமலுக்கு வருவது தொடர்பான அறிவிப்பை நிதித்துறை செயலாளர் கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

பெட்ரோல் விலை உயர்வால் பாதிக்கப்படும் ஏழை, நடுத்தர வர்க்கத்தின் வலியை உணர்ந்து பெட்ரோல் மீது விதிக்கப்படும் வரி லிட்டருக்கு ரூ.3 குறைக்கப்படும் என்று தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நேற்று பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியிட்டு இருந்தார்.

அதன்படி தமிழகத்தில் பெட்ரோல் மீதான வரி லிட்டருக்கு ரூ.3 குறைப்பு நாளை முதல் அமலுக்கு வருகிறது.

சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல்



ரூ.102.49க்கு விற்கப்படும் நிலையில் நாளை முதல் விலை குறைப்பு அமலுக்கு வருகிறது.

தமிழக பட்ஜெட்டில் பெட்ரோல் மீதான வரி குறைக்கப்பட்ட நிலையில் நிதித்துறை செயலாளர் கிருஷ்ணன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

சென்னை ஆக 14 2021: தமிழக சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் உள்ள முக்கிய அம்சங்கள்:-

* சாலை பாதுகாப்பு திட்டத்திற்காக பல்வேறு துறைகளுக்கு ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு

* பொது விநியோக திட்டத்தில் உணவு மானியத்திற்கான ஒதுக்கீடு ரூ.8,437.57 கோடியாக உயர்வு

* மேட்டூர், அமராவதி, பேச்சிப்பாறை உள்ளிட்ட அணைகளின் நீர்மட்ட அளவை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்த நடவடிக்கை

* அடுத்த 10 ஆண்டுகளில் 1000 தடுப்பணைகளும், கதவணைகளும் கட்டப்படும்

* பொது விநியோக திட்டத்தின்கீழ் தேவையான இடங்களில் புதிய நியாய விலைக்கடைகள் அமைக்கப்படும்

பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசிய நிதியமைச்சர்

* குக்கிராமங்களில் அடிப்படை உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் தொடங்கப்படும்

* 2021 - 22 ஆம் ஆண்டிற்குள் 200 குளங்களை தரம் உயர்த்த ரூ.111.24 கொடி ஒதுக்கீடு

* தமிழ்நாட்டில் உள்ள சுய உதவி குழுக்களுக்கு ரூ.20 ஆயிரம் கோடி கடன் உறுதி செய்யப்படும்

* நமக்கு நாமே திட்டம் ரூ.100 கோடியில் மீண்டும் செயல்படுத்தப்படும்

* மாநகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்

* பேரூராட்சிகளில் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

## டிசிபி வங்கி வருடத்திற்கு 7.11% வட்டி விகிதத்தில் அளிக்கும் புதிய சலுகை. 3 வருட வைப்பு நிதியில் வருடாந்திர பலன்கள்இச்சலுகை குறுகிய காலம் மட்டுமே

சென்னை, ஆகஸ்ட் 14 2021: டிசிபி வங்கி 3 வருட வைப்புநிதி திட்டத்தில் இணைந்தால் ஆண்டுக்கு 7.11 சதவிகிதம் என்ற கவர்ச்சிகரமான வட்டி விகிதத்தில் மாபெரும் சலுகையை வழங்குகிறது. இந்த புதிய சலுகை குறுகிய காலத்திற்கு மட்டுமேயாகும். இந்த இலாபகரமான வட்டி விகிதம் 16 ஆகஸ்ட் 2021 அல்லது அதற்கு முன் பதிவு செய்யப்பட்ட வைப்பு நிதிகளுக்கு மட்டும் பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

வைப்பு நிதி என்பது எப்பொழுதுமே பணத்தை சேமித்து நிறைவுடன் வாழ விரும்புபவர்களுக்கு மிகப் பொருத்தமான முதலீட்டு வாய்ப்பாக இருந்து வருகிறது. இத்திட்டம் அவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் பணப்புழக்கத்திற்கான இரண்டு அம்சங்களையும் அளிப்பதால் இதற்கு வரவேற்பும் மிக அதிகம். அந்த வகையில், வைப்பு நிதியில் முதலீடு செய்ய விரும்புபவர்களுக்கு கவர்ச்சிகரமான, பெரும் பலன்களை அளிக்கும் வகையிலான வட்டி விகிதத்தில் ஒரு ஸ்மார்ட்டான முதலீட்டு வாய்ப்பாக டிசிபி வங்கியின் இந்த வைப்பு நிதி திட்டம் அமைந்துள்ளது. டிசிபி வங்கியில் வைப்பு நிதியை முன்பதிவு செய்ய விரும்பும் வாடிக்கையாளர்கள் வங்கியின் கிளைகளுக்கு நேரடியாக சென்றோ, தங்களுக்கான ரிலேஷன்ஷிப் மேனேஜர் உடன் தொடர்பு கொண்டோ அல்லது இணைய தளத்திற்கு சென்று ஆன்லைன் மூலமாகவோ அல்லது மொபைல் அப்ளிகேஷன் மூலமாகவோ எளிதில் மேற்கொள்ள முடியும். இந்தியாவில் வசிக்கும் எந்தவொரு தனிநபர் இந்தியராக இருந்தாலும் சரி, அவர்கள் டிசிபி வங்கியின் 'ஸிப்பி ஆன்லைன் ஃபிக்ஸ்ட் டெபாசிட்'-ஐ தொடங்கலாம். இந்த ஸிப்பி ஆன்லைன் ஃபிக்ஸ்ட் டெபாசிட்' என்பது ஆன்லைன் மூலமாக மேற்கொள்ளும் வைப்பு நிதி வசதியாகும். டிசிபி வங்கியில் சேமிப்புக்கணக்கு தொடங்காமலும் கூட, ஸிப்பி ஆன்லைன் ஃபிக்ஸ்ட்




டெபாசிட்டை ஆரம்பிக்கமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் டிசிபி வங்கியில் வைப்பு நிதியை இந்தியாவில் நீங்கள் எங்கிருந்தாலும், எந்நேரத்திலும் இணையதளம் மூலமாக தொடங்க முடியும். இதற்கு உங்களது வங்கியில் இருந்து டிசிபி வங்கிக்கு நிதி அனுப்பினால் போதும், உடனடியாக வைப்பு நிதியை தொடங்கலாம். இச்சலுகை குறுகிய காலத்திற்கு மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவையில் காவல்துறையின் சார்பில் நடைபெற்ற சுதந்திர தின விழா ஒத்திகை

கோவை, ஆகஸ்ட் 14 2021: கோவை வ.உ.சி மைதானத்தில் காவல் துறையின் சார்பில் சுதந்திர தின விழா அணிவகுப்பு ஒத்திகை நடைபெற்றது.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி சுதந்திர தின விழாவை முன்னிட்டு கோவை வஉசி மைதானத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் கொடியேற்றும் நிகழ்வு மற்றும் காவல்துறை அணிவகுப்புகள் நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம்.

அதன்படி நாளை மறுநாள் சுதந்திர தின விழாவில் கோவை மாவட்ட ஆட்சியர் சமீரன் ஐ.ஏ.எஸ்., வ.உ.சி மைதானத்தில் தேசிய கொடியேற்றுகிறார். இதற்காக இன்று இம்மைதானத்தில் காவல் துறை சார்பாக அணிவகுப்பு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த ஒத்திகை அணிவகுப்பில் நூற்றுக்கு மேற்பட்ட போலீஸார் கலந்து கொண்டனர்.



## தங்க நகையை மீட்டு குறைந்த வட்டிக்கு அடமானத்தில் எடுத்துக் கொள்வதாக கூறி 420 கிராம் தங்க நகை மோசடி: மேனேஜர் உட்பட 5 பேருக்கு போலீசார் வலைவீச்சு.

கோவை, ஆகஸ்ட் 14 2021: கோவை நீலம்பூர் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் தன்னுடைய மகள் திருமணத்திற்காக வைத்திருந்த 52 பவுன் நகையை அடகு வைத்து இருந்தார். இதை தனியாருக்கு சொந்தமான ஒரு அடகு கடைகாரர்கள் தொடர்ந்து தொலைபேசி மூலமாக குறைந்த வட்டியில் எங்களிடம் பணம் தருகிறோம் எனக் கூறினர். அந்த நகையை திருப்பி அவர்களுடைய நிதி நிறுவனத்தில் வைக்கச்சொல்லி வற்புறுத்தியதால் அவருடைய மகள் ப்ரியாவும் தகப்பனாரும் சேர்ந்து நகையை திருப்பி தனியார் நிதி நிறுவனத்தில் வைத்தனர். மீண்டும் திரும்பிச் செல்லும் பொழுது உங்களுடைய நகை கிடையாது என கூறிவிட்டனர். இதுகுறித்து மகள் பிரியா கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து போலி ஆவணம் தயாரித்து மோசடியில் ஈடுபட்ட அடகு கடை 2 பெண்கள் உட்பட 5 பேரை போலீசார் தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதி மக்களிடையே பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

கோவை நீலம்பூர் பகுதியைச் சேர்ந்தவர் துரைசாமி இவர் கோவையில் உள்ள தனியார் தங்க நகை அடமான கடையில் 420 கிராம் தங்க நகைகளை அடமானம் வைத்துள்ளார்.

இந்த நிலையில் கோவை ஒண்டிப்புதூர் பகுதியில் செயல்பட்டு வரும் ஜியோ வி.பி.எல் எனும் நிதி நிறுவனம் டெலி காலிங் மூலம் துரைசாமியை தொடர்பு கொண்டு உங்களுடைய தங்க நகைகளை மீட்டு அதற்கு அதிகமான கடன் தருகிறோம் மேலும் அதற்கான வட்டியும் குறைவு என்று கூறியுள்ளனர். இருந்தபோதும் இதை மறுத்த துரைசாமி தொடர்ந்து பலமுறை அந்த நிறுவனம் மீண்டும் மீண்டும் தொடர்பு கேட்கவே சரி என்று ஒப்புக் கொண்டுள்ளார். அதன் பின்னர் ஜியோ வி பிஎல் நிறுவனம் அந்த தனியார் நிறுவனத்திடம் இருந்து 11 தவணைகளாக துரைசாமியின் 420 கிராம் தங்க நகைகளை மீட்டு அவர்களுடைய நிதி நிறுவனத்தில் வைத்துள்ளனர்.

இந்தநிலையில் ஜியோ பிபிஎல் நிறுவனத்திடமிருந்து எந்தவிதமான தகவலும் கிடைக்கப் பெறாததை எடுத்து அந்த நிறுவனத்தை தொடர்புகொண்டு நகைகளை மீட்க வேண்டும் என்று துரைசாமி கூறியுள்ளார். ஆனால் நிறுவனத்தினர் காலதாமதம் செய்துள்ளனர். அதனைத் தொடர்ந்து துரைசாமி அவருடைய மகள் பிரியா என்பவரை அழைத்துக்கொண்டு அந்த நிறுவனம் சென்று நகைகளை மீட்பதற்காக எவ்வளவு தொகை செலுத்த வேண்டும் என்று கேட்டுள்ளார். ஆனால் அந்த நிறுவனத்தினர் உங்களுடைய நகைகள் இங்கு இல்லை குறைந்த அளவே உள்ளது. என்று கூறியுள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த துரைசாமி மற்றும் அவருடைய மகள் பிரியா கோவை சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அந்த நிறுவனத்தின் பொது மேலாளர் பார்த்தசாரதி மற்றும் நிறுவன மேலாளர் வித்யா காசாளர் ஜாஸ்மின் மற்றும் விஷ்ணு, மற்றும் பிரபு ஆகிய 5 பேர் மீதும் தங்களுடைய நகைகளை மோசடி செய்து அபகரித்து விட்டதாகவும் மேலும் போலி கையொப்பமிட்டு நகைகளை கையாடல் செய்ததாக புகார் அளித்துள்ளனர். புகாரை தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து பாதிக்கப்பட்ட துரைசாமியின் மகள் பிரியா கூறுகையில்:- நாங்கள் தனியார் நிறுவனத்தில் அடகு வைத்த 420 கிராம் நகைகளை ஜியோ பிபிஎல் என்னும் நிறுவனம் குறைந்த வட்டியில் நகைகளை அடகு



எடுத்துக் கொள்வதாக கூறி 10 தவணைகளாக அந்த நிறுவனம் என்ற எங்களுடைய நகைகளை பெற்று அவர்களுடைய நிறுவனத்தில் அடகுக்கு வைத்தனர். இந்தநிலையில் எங்களுடைய நகைகளை மீட்பதற்காக அந்த நிறுவனத்திற்கு சென்ற பொழுது இன்று வாருங்கள் நாளை வாருங்கள் என்று காலம் தாழ்த்தினர். மேலும் உங்களுடைய நகைகள் இங்கு இல்லை என்று பதிலளித்தனர். இதனால் சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கும் மேலும் என்னுடைய தந்தையின் போலியான கையெழுத்தைப் போட்டு அவர்கள் எங்களுடைய நகைகளை ஏமாற்றி விட்டனர். எங்களுக்கு எங்களுடைய நகைகள் வேண்டும் இதற்கு காரணமான அந்த நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் 5 பேரையும் கைது செய்து அவர்களிடமிருந்து எங்களுடைய நகைகளை மீட்டு கொடுக்க வேண்டும்.

## தேர்தல் அறிக்கையில் சொன்ன அனைத்து வாக்குறுதிகளும் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் - அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்

மதுரை, ஆகஸ்ட் 14 2021: மதுரை விமானநிலையத்தில் செய்தியாளர்களுக்கு நிதியமைச்சர் பிடி பழனிவேல் தியாகராஜன் பேட்டியளித்ததாவது:

வருவாய் இல்லாமல் அரசாங்கம் திவாலாக உள்ளதால் வரிகளை உயர்த்தியே ஆக வேண்டும் என்றும், தேர்தல் அறிக்கையில் சொன்ன அனைத்து வாக்குறுதிகளும் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்றும் நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்துமுன்னாள் அமைச்சர் மாபா பாண்டியராஜன் கூறியது குறித்த கேள்விக்கு அவருக்கு பொருளாதாரம் குறித்தே தெரியாது எனவும், வெள்ளை அறிக்கை சம்பந்தமாக வாய்க்கு வந்தபடி உளறிக்கொண்டு இருக்கிறார் என விமர்சனம் செய்தார். மேலும் வெளிப்படைதன்மையாக இருக்க வேண்டும் என்கிற நோக்கத்தில் தான் வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டு உள்ளது என கூறிய அவர்., அரசு என்ன நிலையில் உள்ளது என்பதை மக்களிடம் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அறிக்கை வெளியிடப்பட்டு உள்ளது எனவும் கூறினார்.

தொடர்ச்சியாக., 110 விதியில் கீழ் முன்னாள் முதல்வர்கள் ஜெயலலிதா மற்றும் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்த திட்டங்களின் நிலை குறித்து



எனக்கே இன்னும் தெளிவு கிடைக்கவில்லை என கூறினார்.

ஜெயலலிதா அறிவித்த தொலை நோக்கு பார்வை திட்டம் - 2023 நிறைவேறவில்லை. எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு பொறுப்பற்ற ஆட்சி நடைபெற்றுள்ளது. தொடர்ந்து., தமிழக அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி 17%லிருந்து 28% ஆக உயர்த்தப்படுமா என்ற கேள்விக்கு..?

அக்கேள்விக்கு பதில் ஏதும் அளிக்க முடியாமல் அமைச்சர் நழுவி சென்றார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## 75 வது சுதந்திர தின ஆண்டை கொண்டாடும் விதமாக கோவையை சேர்ந்த 75 கராத்தே வீரர், வீராங்கனைகளுக்கு தகுதி பட்டயம் வழங்கப்பட்டது



கோவை, ஆகஸ்ட் 14 2021: நாடு முழுவதும் 75 வது ஆண்டு சுதந்திர தின விழா வெகு விமரிசையாக கொண்டாட ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் 75 வது சுதந்திர தின சிறப்பு ஆண்டை கொண்டாடும் விதமாக கோவை மை கராத்தே இண்டர்நேஷனல் பயிற்சி பள்ளியில் பயிற்சி முடித்த 75 கராத்தே மாணவ, மாணவிகளுக்கு தகுதி பட்டை வழங்கும் விழா பயிற்சி வளாகத்தில் நடைபெற்றது. தலைமை பயிற்சியாளர் தியாகு நாகராஜ் தலைமையில் நடைபெற்ற இதில், கட்டா மற்றும் குமித்தே ஆகிய கலைகளில் பத்து ஆண்டுகளாக தீவிர பயிற்சி பெற்று தகுதியடைந்த மாணவ, மாணவிகளுக்கு கருப்பு பட்டை வழங்கப்பட்டது. இதில் பயிற்சியாளர்கள் சிவமுருகன் அரவிந்த் சரண் தீபக் ராஜ்குமார் சின்னத்தம்பி ஹேமந்த் சிவலிங்கப் பெருமாள் விஷ்ணு ஆகியோர் கலந்து கொண்டனர். கருப்பு பட்டையம் பெற்ற மாணவிகள் கூறுகையில், தீவிர பயிற்சிக்கு பெற்றதால் இந்த பட்டயத்தை பெற முடிந்ததாகவும், இதனால் மன உறுதி மற்றும் தன்னம்பிக்கை அதிகரித்து உள்ளதாக தெரிவித்தனர். மேலும் ஒலிம்பிக்கில் வெற்றி பெற்று பதக்கங்கள் பெற தீவிர பயிற்சிகள் மேற்கொள்ள போவதாகவும் நம்பிக்கை தெரிவித்தனர். விழாவில் பயிற்சி முடித்த தமிழ்ச்செல்வன் சாரதி, மகேஷ்வர், ஷாமில் ஹூசைன் டேன்யூ டிஜி தேவதர்ஷினி, ஷாஸா, உட்பட மாணவ மாணவிகள் பட்டயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## உக்கடம் வாலாங்குளத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்ட பணிகள் நடைபெற்று வரும் சூழ்நிலையில் ஆயிரக்கணக்கான மீன்கள் செத்து மிதந்த வண்ணம் உள்ளன



கோவை, ஆகஸ்ட் 14 2021: கோவை மாவட்டத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றது. அதன் ஒரு பகுதியாக சுங்கம் அரசு போக்குவரத்து கழக பணிமனை பின்புறமுள்ள வாலாங்குளத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டு எழில்மிகு நடைபாதை, மிதவை நடைமுறை மற்றும் கடைகள் சிறுவர்களுக்கு விளையாட்டு பூங்கா மற்றும் மின்விளக்குகளால் அலங்கரிப்பது என பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக கரைகளும் பலப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த சூழ்நிலையில் வாலாங்குலத்தில் திடீரென ஆயிரக்கணக்கான ஜிலேபி கட்லா வகை மீன்கள் செத்து மிதக்கின்றன. இதன் காரணமாக அந்த பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசி வருகிறது அந்த வழியாகச் செல்வோர் துர்நாற்றம் தாங்க முடியாமல் மூக்கை பற்றியவாறு செல்கின்றனர்.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருவதாலும் குளத்தின் கரையை பலப்படுத்தும் வகையில் பல்வேறு பொருட்கள் கொண்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் தற்போது ஆயிரக்கணக்கான மீன்கள் செத்து நடப்பதால் குளத்தில் ரசாயன மாற்றம் ஏற்பட்டு இருக்கலாம் மேலும் சாக்கடை கழிவுகளின் மூலமும் ஸ்மார்ட் சிட்டி திட்ட பணிகள் மேற்கொள்வதால் அதன் மூலமும் குளத்தின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டு தற்போது மீன்கள் செத்து மடிகின்றன. எனவே உடனடியாக குளத்தின் நீரில் உள்ள தன்மையை ஆராய்ந்து அதற்கு ஏற்றவாறு மருந்துகள் தெளித்து மீண்டும் மீன்கள் இயற்கை சூழலில் வளரும் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கோவை மாநகர் பகுதிகளில் மாநகராட்சி சுவர்களில் போஸ்டர் ஒட்டுவதை தடுக்க சுதந்திரப் போராட்ட வீரர்களின் படங்களை வரையும் பணி தீவிரம்



கோவை, ஆகஸ்ட் 14 2021: கோவை மாநகராட்சி அலுவலக சுவர்களில் போஸ்டர்கள் ஒட்டுவதை தடுக்க சுதந்திர போராட்ட வீரர்கள் மற்றும் தமிழர் பாரம்பரியத்தை விளக்கும் ஓவியங்களை வரையும் பணி தீவிரமாக நடந்து வருகின்றன.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கோவை மாநகரில் குளங்கள் உள்ளிட்ட இடங்களை அழகுபடுத்த மாநகராட்சி நிர்வாகம் சார்பில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு பக்கம் வளர்ச்சிப்பணிகள் நடந்தாலும் மற்றொரு பக்கம் நகரை அலங்கோலமாக்கும் வகையில் அரசு அலுவலகங்களில் மேம்பாலங்கள் மற்றும் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சாலையோர சுவர்களில் அரசியல் கட்சிகள் தனிநபர் குடும்ப நிகழ்ச்சிகள் ஊர் திருவிழாக்கள் தனியார் நிறுவன விளம்பர போஸ்டர்கள் ஒட்டப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கோவை மாநகர் பகுதிகளில் சுவர்களின் போஸ்டர் ஒட்டுவது தடுக்கும் வகையில் மறைந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் புகைப்படங்கள் மற்றும் தமிழர் பாரம்பரியத்தை விளக்கும் வகையில் ஓவியங்கள் வரைய மாநகராட்சி முடிவு எடுத்துள்ளது.

இந்த நிலையில் பீளமேடு, காந்திபுரம், அவிநாசி ரோடு போன்ற பகுதிகளில் ஓவியங்கள் வரையும் பணி தீவிரமடைந்துள்ளது.

## ஒரிக்கை ஊர்ப்புற நூலகத்தில் தேசிய நூலக தின விழா



காஞ்சிபுரம், ஆக.14 2021: ஒரிக்கை ஊர்ப்புற நூலகத்தில் தேசிய நூலக தின விழா கொண்டாடப்பட்டது.

நூலக தந்தை பத்மஸ்ரீ டாக்டர் எஸ். ஆர் அரங்கநாதனின் 129-வது பிறந்தநாளையொட்டி இந்தியா முழுவதும் தேசிய நூலக தினம் கொண்டாடப்பட்டது. அதையொட்டி காஞ்சிபுரம் அருகே ஒரிக்கையில் செயல்பட்டுவரும் ஊர்ப்புற நூலகத்தில் தேசிய நூலக தினம் கொண்டாடப்பட்டது. நூலக தந்தை டாக்டர் எஸ்.ஆர் அரங்கநாதனின் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர். பிறகு வாசகர் வட்ட துணைத்தலைவர் ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அதிகாரி முத்து புரவலர் சேர்ப்புத்தொகை ரூ.1000 செலுத்தி புரவலராக இணைந்துகொண்டார்.

இந்நிகழ்ச்சியில் சமூக இடைவெளியுடன் நூலக வாசகர்கள், வாசகர் வட்ட உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் நூலகர் 'நல்நூலகர்' என். லாவண்யா அனைவருக்கும் நன்றி கூறினார்.

## பொள்ளாச்சி அடுத்த டாப்ஸ்லிப் அருகே உள்ள யானைகள் வளர்ப்பு முகாமில் உலக யானைகள் தினம் கொண்டாடப்பட்டது



கோவை, ஆகஸ்ட் 14 2021: குறைந்துவரும் யானைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், பொதுமக்களிடம் யானைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வருடந்தோறும் ஆகஸ்ட் 12ஆம் தேதி உலக யானைகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அன்றைய தினம் பொள்ளாச்சி அருகே உள்ள டாப்சிலிப்பில் வளர்ப்பு யானைகள் வரவழைக்கப்பட்டு, யானைகளுக்கு பிடித்த உணவான கரும்பு, வாழைப்பழம் போன்றவை படையல் வைத்து பொங்கல் வைத்து வழிபடுவது வழக்கம். அப்போது கோவை, திருப்பூர், ஈரோடு போன்ற பல்வேறு பகுதியிலிருந்து பொதுமக்களும், வன ஆர்வலர்களும், சுற்றுலா பயணிகளும் கலந்துகொள்வர். இந்நிலையில், கோவை மாவட்டம் பொள்ளாச்சி அடுத்த டாப்சிலிப் அருகே உள்ள கோழிக்கமுத்தி யானைகள் வளர்ப்பு முகாமில் உலக யானைகள் தினம் கொண்டாடப்பட்டது. உலாந்தி வனச்சரகர் நவீன் குமார் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் யானைகளுக்கு பொங்கல் வைத்து, அங்கே உள்ள விநாயகருக்கு தீபாராதனை செய்து வழிபாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வனவர்கள் மற்றும் யானை பாகங்கள் சமூக இடைவெளியுடன் கலந்து கொண்டனர். கொரோனா நோய்த்தொற்று காரணமாக ஆனைமலை புலிகள் காப்பகம் மூடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

## கோவை ஜி.என்.மில்ஸ் பகுதியில் வீட்டில் புகுந்த கண்ணாடி வீரியன் பாம்பிடம் இருந்து எஜமானரை காப்பாற்ற தனது உயிரை விட்ட நன்றியுள்ள நாய்



கோவை, ஆகஸ்ட் 14 2021: கோயமுத்தூர் ஜி.என்.மில்ஸ் வைலட் கார்டன் பகுதியில் உள்ள யமுனா வீதியில் குடும்பத்தோட குடியிருந்து வருகிறார் சுரேந்தர். இந்த நிலையில நேற்று இரவு 11 மணி அளவில் அவர் வீட்டில் வளர்த்து வரும் 12 வயதுடைய பொமரேரியன் நாய் குரைத்துக் கொண்டே இருந்துள்ளது.

நீண்ட நேரமா நாய் குரைத்துக் கொண்டே இருந்ததைக் கண்டு சுரேந்தரின் தாயார் கதவை திறந்து வெளிய வந்து பார்த்துள்ளார். அப்போது காலுக்கு அடியில் 4 அடி நீளம் உள்ள பாம்பு ஒன்று கடந்து அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காருக்கு அடியில் சென்றுள்ளது.

அதனை பார்த்து மீண்டும் அந்த நாய் குரைத்துக் கொண்டே காரின் அடியில் இருந்த பாம்பின் வாலை பிடித்து இழுத்துள்ளது அப்போது திடீர்னு அந்த பாம்பு திரும்பி நாயின் கண் மற்றும் காதில் கொத்தியுள்ளது.

இமீஹில் வலியால துடித்த நாய் சிறிது நேரத்தில் பரிதாபமாக இறந்தது. இதைக் கண்டு அச்சமடைந்த சுரேந்தர் உடனடியாக ஸ்நேக் ரெஸ்க்யூ குழுவினர்க்கு தகவல் தெரிவித்துள்ளார்.

சுமார் 12 மணியளவில் அங்கு வந்த பாம்பு பிடிக்கும் நபர் அவர்கள் வீட்டின் மாடிப் படிக்குக்குள் புகுந்திருந்த பாம்பை ஒரு டப்பா மூலம் பிடித்து அதனை வனப்பகுதிக்குள் கொண்டு சென்றூ விட எடுத்துச் சென்றார், பிடிபட்ட பாம்பு 4 அடி நீளம் இருந்த கண்ணாடி வீரியன் வகைய சேர்ந்தது என்றும், இது அதிக விஷம் கொண்ட பாம்பு என்றும் தெரியவந்துள்ளது.

அதிர்ஷ்டவசமா வீட்டில் யாருக்கும் எதுவும் ஆகவில்லை என்றபோதும் அவர்களை காப்பாற்றும் முயற்சியில் அவர்களின் நாய் பாம் கொத்தி இறந்தது அவர்களில் வீட்டில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## டாடா டீ பிரீமியம் - 'தேஷ் கி சாய்' இந்த சுதந்திர தினத்தையொட்டி, இந்தியாவின் செழிப்பான கலாச்சார பன்முகத்தன்மையைக் கொண்டாடுகிறது




சென்னை, ஆகஸ்ட் 14 2021: டாடா டீ பிரீமியம், இந்திய கைவினைஞர் சமூகத்திற்கு ஆதரவளிக்கும் ஒரு தீவிர முயற்சியாக, இந்த சுதந்திர தினத்தில் தேஷ்காகுல்ஹத் எனும் ஒரு தனித்துவமான தொகுப்பை வெளியிடுகிறது. இதற்காக டாடா டீ பிரீமியம், இந்தியாவிலுள்ள உள்ளூர் கைவினைஞர்களின் வேலைப்பாடுகளை ஊக்குவிக்கும் ஸ்டார்ட்அப் நிறுவனமான ரேர் பிளானெட் உடன் கூட்டுச்செயல்பாட்டை மேற்கொள்கிறது நேர்த்தியான கையால் வரையப்பட்ட இந்த குல்ஹத்களின் (மண் குவளைகள்) விற்பனையில் இருந்து கிடைக்கும் வருமானம், தற்போதைய சூழலில் கடுமையான பாதிப்புக்குள்ளாக்கியிருக்கும் கைவினைஞர் சமூகத்திற்கு ஆதரவளிக்க உதவும். பீகாரிலுள்ள மதுபானி நாட்டுப்புறக்கலை, மகாராஷ்டிராவிலுள்ள வர்லி நாட்டுப்புறக்கலை, பஞ்சாப்பின் ஃபுல்காரி வடிவங்கள், ஒடிசாவின் படசித்ரா, உத்தரப்பிரதேசத்தின் சஞ்ஜி நாட்டுப்புறக்கலை மற்றும் இதர வடிவங்கள் உட்பட ஒவ்வொரு பிராந்தியத்துக்குமான குறிப்பிட்ட கலைவடிவங்களைக் கொண்டு இந்த சிறப்பு குல்ஹத்கள் கையால் உருவாக்கப்பட்டிருக்கின்றன. தேஷ்காகுல்ஹத் தொகுப்பில் 26 தனித்துவமான குல்ஹத் வடிவமைப்புகள் இடம்பெற்றுள்ளன; ஒவ்வொன்றும் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளின் பங்களிப்பை வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு பகுதியிலும் பிரபலமாக விளங்கும் உருவங்கள் & அடையாளங்களை கருவாகக் கொண்டு, ஒவ்வொரு குல்ஹத்தும் அந்தந்த பகுதியிலுள்ள ஒரு குறிப்பிட்ட கலைவடிவத்தைக் கொண்டாடுகிறது. கையால் வரையப்பட்ட இந்த சிறப்பு குல்ஹத்கள், இந்தியாவின் வேறுபட்ட கலாசாரம் மற்றும் செழிப்பான பாரம்பரியத்தை ஒரு தனித்துவமான கேன்வாஸில் இவ்வாறு வெளிப்படுத்துகின்றன. இந்த முயற்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக, இந்த பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் ஒரு டிஜிட்டல் ஃப்லிமை இந்த பிராண்ட் வெளியிட்டுள்ளது. பிரபல கலைஞரான பாடகர் ரிதுராஜ் மொஹந்தி பாடியிருக்கும் இந்த மியூசிகல் வீடியோ நாட்டின் முழுவதிலும் ஒரு வண்ணமயமான பயணத்தை மேற்கொள்ள வைக்கிறது; பிராந்திய கைவினைஞர்கள் மற்றும் அவர்களால் வரையப்பட்ட குல்ஹத்களின் கண்ணோட்டத்தில் இந்தியாவின் மிக ஆழமான கலைவடிவங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இது பற்றி டாடா கன்ஸ்யூமர் புராடக்ட்ஸின் பேக்கேஜ்டு பீவரேஜஸ் பிரிவு தலைவர் புனீத் தாஸ் பேசுகையில், "நாடு முழுவதுமிருக்கும் இந்திய கலாசாரத்தின் ஒரு விரிவான பகுதியே குல்ஹத்கள் (மண் குவளைகள்); நம்மில் பெரும்பாலோனோர் எப்போதாவது குவளைகளில் டீ குடித்திருப்போம். இந்த தேசத்தின் டீயாக விளங்கும் டாடா டீ பிரீமியம். ஒவ்வொரு மாநில பெருமையின் அடையாளங்களையும், ஒவ்வொரு பகுதிக்குமான நுண்ணறிவுகளின் அடியாழத்தில் இருக்கும் தகவல்களையும் அடிப்படையாக கொண்டு, ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனிப்பயனாக்கப்பட்ட தொகுப்பு மூலமாக அந்தந்த பகுதிக்கான பெருமையை எப்போதும் வெளிக்கொணர்கிறது. அதனால், கடந்த ஆண்டின் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் இந்தியாவின் மண்டல பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் கொண்டாட விரும்புகிறோம். இதன் வெளிப்பாடாக, மனதை ஈர்க்கும் ஒரு அழகியலுடன் கூடிய கேன்வாஸ் போல, மண் குவளைகளை இந்த வருடம் பயன்படுத்தியிருக்கிறோம். இம்முயற்சியின் மூலம் இந்திய கைவினைஞர் சமூகத்திற்கான எங்களது ஆதரவைத் தொடர்கிறோம். இந்த மண் குவளைகள் மண்பாண்ட கலைஞர்களின் திறமையைக் கொண்டாடுவதோடு, ஒரு வண்ணமயமான கலைத்தொகுப்பை வாங்கத் தூண்டுவதாக அமையும். இதன் மூலம் உள்ளூர் கைவினைஞர்களை ஆதரிக்கும் ஒரு தனித்துவமான முயற்சியாக இது அமைந்திருக்கிறது. இந்த கைவினைஞர்களின் முன்னேற்றத்திற்கான சிறிய படியாக #தேஷ்காகுல்ஹத் முயற்சி இருக்குமென்று நம்புகிறோம்; கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் ஒவ்வொரு மண் குவளை வாங்கும்போதும் கைவினைஞர் சமூகத்தை ஆதரிக்கும் வகையில் ஒரு கூடுதல் தொகையை எங்களது பங்களிப்பாக வழங்குவோம்" என்று தெரிவித்தார்.

## புகையிலை தடுப்பு நடவடிக்கைகளுக்கான மாவட்ட அளவிலான குழு கூட்டம் : மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது

காஞ்சிபுரம், ஆக. 14 2021: காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் புகையிலை தடுப்பு நடவடிக்கைகளுக்கான மாவட்ட அளவிலான குழு கூட்டம் உணவு பாதுகாப்புத்துறை சார்பில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் டாக்டர் மா. ஆர்த்தி தலைமை வகித்தார். பிறகு அவர் பேசுகையில்:

காஞ்சீபுரம் மாவட்டத்தில் கடந்த 23.07.2021 முதல் 11.08.2021 வரை உணவு பாதுகாப்புத்துறை, காவல்துறை அலுவலர்கள் குழுவாக இணைந்து 520 கடைகளில் ஆய்வு செய்யப்பட்டதில் 17 கடைகளில் தடை செய்யப்பட்ட பான்மசாலா மற்றும் குட்கா விற்பனை செய்வது கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. அதன் மொத்த மதிப்பு ரூ.1,81,410. மேலும், உணவு பாதுகாப்புத்துறை மூலம் 17 கடைகளுக்கு சட்ட ரீதியாக நோட்டீஸ் வழங்கப்பட்டது. இதில் 5 கடைகளுக்கு ரூ.5000 விதம் ரூ.25,000 மும், இரண்டாவது முறையாக விற்பனை செய்த ஒரு கடைக்கு ரூ.10,000மும் மொத்தம் சேர்த்து 6 கடைகளுக்கு ரூ.35,000 உணவு பாதுகாப்புத்துறை மூலம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் நிக்கோட்டினை சேர்க்கப்பட்ட பொருளாக கொண்ட குட்கா, பான் மசாலா மற்றும் மெல்லும் புகையிலை பொருட்களை தயாரிக்கவோ, வாகனங்களில் எடுத்துச் செல்லவோ, விநியோகிக்கவோ, சேமிக்கவோ மற்றும் விற்பனை செய்யவோ கூடாது. மேலும், இவற்றை உபயோகப்படுத்தும் பொழுது வாய்ப்புண், குடல் புண் மற்றும் புற்று நோய், உயர் இரத்த அழுத்தம், இதய நோய், மன நல பாதிப்பு, கல்லீரல் /சிறுநீரக பாதிப்புகள் போன்ற உடல் பாதிப்புகளும் இறுதியாக உயிரிழப்பை ஏற்படுத்திடும். எனவே, தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்களை தவிர்ப்போம், புற்றுநோய் வராமல் காப்போம். தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களின் விற்பனை காணப்பட்டால் பொதுமக்கள் 94440 42322 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம் என அவர் தெரிவித்தார்.

மேலும் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் முதல் முறை குற்றம் என்றால் நோட்டீஸ் வழங்கவும். இரண்டாம் முறை குற்றம் என்றால் அபராதம் விதிக்கவும், மூன்றாம் முறை குற்றம் என்றால் உரிமம் ரத்து செய்யப்பட்டு, கடைக்கு சீல் வைக்க அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், உணவு பாதுகாப்புத் துறை, மாவட்ட நியமன அலுவலர் தி. அனுராதா, காஞ்சிபுரம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு டாக்டர் எம்.சுதாகர், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு கலந்து கொண்டனர்.



**காஞ்சிபுரம்: உள்ளாட்சி மன்றத் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஒன்றிய முத்தியால்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையங்களை மாவட்ட கலெக்டர் டாக்டர் மா. ஆர்த்தி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் வட்டார வளர்ச்சி அலுவலர் இரா.சம்பத் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.**

## கொரானா 3-ம்அலையை தடுக்க தமிழக அரசு பல்வேறு விதமான தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை



மதுரை, ஆகஸ்ட் 14 2021: கொரானா 3ம்அலையை தடுக்க தமிழக அரசு பல்வேறு விதமான தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. அந்த வகையில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து கிராம ஊராட்சி பேரூராட்சி நகராட்சிகளில் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம் மேலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழவளவு கிராமத்தில்ஊராட்சி மன்ற தலைவர் மனோரஞ்சிதம் மகாதேவன் தலைமையில்பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஊராட்சி முழுவதும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு கிராமம் முழுவதும் சுவரோவியம் சாலைகளில் சுவரோவியம் பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் தூய்மைப் பணியாளர்கள் கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் துணைத் தலைவர் மெகர்தாஸ் ஊராட்சி செயலாளர் இளையராஜா உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

# ஜெனீவா ஒப்பந்த தின உறுதிமொழி ஏற்பு



விக்கிரவாண்டி, ஆகஸ்ட் 14 2021: விழுப்புரம் கல்வி மாவட்ட ஜே.ஆர்.சி., சார்பில் ஜெனீவா ஒப்பந்த தின விழா உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது.

விக்கிரவாண்டி அடுத்த முட்டத்தூர் ஒய்க்காப் மேல்நிலைப்பள்ளியில் நடந்த நிகழ்ச்சிக்கு தியாகு குமார் தலைமை தாங்கினார். உதவி தலைமை ஆசிரியர்கள் பியூலா சித்ரா பால், ஜேக்கப் ஜீவானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர் . பள்ளி தலைமை ஆசிரியர் ஜாக்குலின் ஆசாநாத் வரவேற்றார்.

கஞ்சனூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஞானசேகர் தலைமையில் ஜெனீவா ஒப்பந்த தின உறுதிமொழி ஏற்று பொதுமக்களுக்கு முகக் கவசம் வழங்கினார். ஜே.ஆர்.சி., மாவட்ட கன்வீனர் பாபு செல்வதுரை கொரோனா நோய் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு விளக்கமளித்து , தடுப்பூசி அவசியம் பற்றி கூறினார்.

ஆசிரியகள் டேவிட் ஜெயபிரகாஷ், டேவிட் லிவிங்ஸ்டன்,டேவிட்சார்லஸ்,செல்வக்குமார், விஜயபாஸ்கர், பிரேம், மேற் பார்வையாளர் குப்புசாமி உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

முட்டத்தூர் ஒய்காப் மேல்நிலைப்பள்ளியில் நடந்த விழாவில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஞானசேகர் பொதுமக்களுக்கு முகக்கவசம் வழங்கினார் . அருகில் ஜே.ஆர்.சி., மாவட்ட கன்வீனர் பாபு செல்வதுரை.

# ஸ்ரீவி. கலசலிங்கம் பல்கலையில் ஏஆர்ஏஐ, டிஸிஎஸ் கம்பெனியுடன் இணைந்து புதிய பாடப் பிரிவுகள் ஆரம்பம்



விருதுநகர், ஆகஸ்ட் 14 2021: ஸ்ரீவி. கலசலிங்கம் பல்கலை புனேயில் உள்ள இந்திய ஆட்டோமோடிவ் ஆராய்ச்சி குழுமத்துடன் புலீஜிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன்படி, முதுநிலை ஆட்டோமோட்டிவ் ஸிஸ்டம் (எலெக்ட்ரிக் பேருந்துகள்) என்ற இரண்டு ஆண்டு படிப்பு ஆட்டோமொபைல் துறையில் துவக்க உள்ளது. இதற்கான புலீஜிந்துணர்வு ஒப்பந்தத்தில் பல்கலை துணைத்தலைவர் முனைவர் எஸ். சசிஆனந்த், ஏஆர்ஏஐ இயக்குநர் ரெஜி மத்தாய் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். மேலும் இந்த படிப்பில் சேரும் மாணவர்களுக்கு ஒரு வருடம் கலசலிங்கம் பல்கலையிலும், ஏஆர்ஏஐ புனேயில் ஒரு வருடம் பயிற்சியும் வழங்கப்படும்.

மேலும் கலசலிங்கம் பல்கலைக்கழகம் டிசிஎஸ்-ஐஆன் கம்பெனியுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்படி, பி.எஸ்.சி (கம்ப்யு+ட்டர் சயின்ஸ்) பி.எஸ்.சி (ஐடி) போன்ற படிப்புகள் டிசிஎஸ் கம்பெனியுடன் இணைந்து துவக்கப்படும். பல்கலை துணைத்தலைவர் முனைவர் எஸ். சசிஆனந்த், டிசிஎஸ் மண்டல தலைவர் டி. சுரேஸ்குமார் ஆகியோர் இந்த புலீஜிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

# சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் கே.எஸ், அன்சாரியின் மூத்த மகள் மறைவிற்கு, செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள் அஞ்சலி




திண்டிவனம், ஆகஸ்ட் 14 2021: விழுப்புரம் வடக்கு மாவட்டம், மயிலம் ஒன்றியம் கூட்டேரிப்பட்டை சேர்ந்த மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் கே.எஸ், அன்சாரியின் மூத்த மகள் மறைவிற்கு, விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும், தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள் அஞ்சலி செலுத்தினார். உடன் மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர் ப .சேகர், மாநில பொதுக்குழு உறுப்பினர் என். ரமணன், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கே.சி.ஆதித்தன், அருணகிரி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எம் . டி. பாபு, வர்த்தகர் அணி செழியன், கார்த்தி, சு.வே.வெங்கடேஷ் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கோவையில் கொரோனா நோய்த் தொற்றுக்கு வசூலித்த கூடுதல் கட்டணம் ரூ.4.47 லட்சம் நோயாளியிடம் திருப்பி அளிக்கப்பட்டது



தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்று சிகிச்சைக்கு தனியார் மருத்துவமனைகளுக்கு அரசு கட்டணம் நிர்ணயித்துள்ளது. அந்தக் கட்டணத்தை மட்டுமே வசூலிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கூடுதல் கட்டணம் வசூலிக்கும் தனியார் மருத்துவமனைகள் மீது பொது மக்கள் புகார் அளிக்கும் விதமாக கட்டுப்பாட்டு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு கட்டணமில்லா தொலைபேசி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், கூடுதல் கட்டணம் வசூலித்தது தொடர்பாக சுகாதாரத் துறையினர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். இதில் கூடுதல் கட்டணம் பெற்றிருந்தது தெரியவந்தால் வசூலிக்கப்பட்ட கூடுதல் கட்டணத்தை நோயாளிக்கு திரும்ப வழங்க தனியார் மருத்துவமனைகளுக்கு உத்தரவிடப்பட்டு வருகிறது. அதன்படி கோவையில் இதுவரை 19 பேருக்கு கூடுதல் கட்டணம் திரும்பப் பெற்று தரப்பட்டுள்ளது.

இந்நிலையில், கோவை ஜி.என்.மில்ஸ் பகுதியைச் சேர்ந்த ஜபருல்லா உக்கடம் புறவழிச் சாலையிலுள்ள தனியார் மருத்துவமனையில் அண்மையில் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெற்றுள்ளார். இவருக்கு அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாவட்ட கலெக்டரிடம் அவர் புகார் அளித்துள்ளார். கலெக்டரின் அறிவுறுத்தல்படி கூடுதலாக வசூலிக்கப்பட்ட ரூ. 4 லட்சத்து 47 ஆயிரத்து 990 நோயாளியிடம் திரும்ப அளிக்கப்பட்டுள்ளது.

# தேசிய திறனாய்வுத் தேர்வில் கோவையை சேர்ந்த ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவ,மாணவியர்கள் 9 பேர் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர்



